மாட்டேன். ஆகவே, பல்லப்பட்டியில் தனியாக ஒரு பொறியாளர் அலுவலகத்தை அமைக்க வேண்டுமென்று பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன். எல்லாக் கிராமங்களுக்கும் மின்சார இணைப்பு கொடுக்கப்பட்டு முடிவடைகின்ற நிலையில் இருந்தாலும் என்னுடைய தொகுதியில் இன்னும் சில கிராமங்கள் மின் இணைப்புப் பெறுமல் இருக்கின்றன. அதற்குரிய முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்று நான் அறிகிறேன். விரைவிலே அதைச் செய்ய வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

நாம் எல்லாம் மனதார பாராட்டத் தக்க வகையிலே நமது மாநிலத்தில் மின்சார வாரியம் செயல்பட்டு வருகிறது. அகில இந்திய அளவிலே பார்த்தாலும் கூட தமிழகம் தலை நிமிர்ந்து நிற்கிறது. அதைக்கண்டு நாம் பெருமைப் படுகிறோம்; பூரிப்படைகிறோம்; பெருமகிழ்ச்சியடைகிறோம். அதற்காக மின்சாரத் துறை அமைச்சரவர்களையும், மின்சார வாரியத்தையும் அதிலே பணியாற்றுகின்ற அதிகாரிகளையும், நமது மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்களையும் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். பாராட்டுகிறேன். நன்றி.

2. அறிவிப்பு—தொடர்ச்சி

(ஈ) திரு. எஸ். காதர் பாட்சா என்கின்ற வெள்ளைச்சாமி அவர்களுக்கு தி.மு.க. உறுப்பினர்களுடன் இடம் அளிக்கப்பட்டது குறித்து

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. எஸ். காதர் பாட்சா என்கிற வெள்ளைச்சாமி அவர்கள் 12—11—1972 முதல் சட்டப் பேரவை திராவிட முன்னேற்றக் கழகத்தில் தாம் சேர்ந்து விட்டதாகவும், எனவே, அக்கட்சி உறுப்பினர்களுடன் தமக்கு இடம் ஒதுக்குமாறும் கேட்டிருக்கிறார்கள். இந்த அறிவிப்பு கடந்த 2-ம் தேதி அன்றே வெளியிடப்பட்டிருக்க வேண்டும். ஆனால் வெளியிடப்படவில்லை. அதற்குரிய காரணம்—அன்றைக்குள்ள நிலைமை—மாண்புமிகு உறுப்பினர்கள் அறிந்ததே. அவருக்கு அவ்வாறே இடம் ஒதுக்கப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.